நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# CC No. 25/2020

**2021**-ம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் **28**-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ.சா. 27** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலச்சந்தர் | வயது | |
| தகப்பனார் பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் இடும்பாவனத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் ஏரியா மேனேஜராக வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியை எனக்கு தெரியும். 1வது எதிரி யை எனது மைத்துனர்பன்னீர்செல்வம் மூலம் தெரியும். பட்டியல் சாட்சி அப்பாஸ், வீரராஜன், பிரோம்குமார், ராமச்சந்திரன், சங்கீதா, ராஜன் ஆகியோரை தெரியுமா என்றால் ராஜனை மட்டும் எனக்கு தெரியும். அவர் எனக்கு கீழ் பணிபுரிந்ததால் எனக்கு அவரை தெரியும். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் 1வது எதிரி சக்திவேலிடம் ரூ.1லட்சம் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். அரசாங்க வேலை கோர்ட்டில் வாங்கி தருவதாக கூறினார். அதற்காக பணம் கொடுத்தேன். என்னுடைய ஆவணங்களை செராக்ஸ் காப்பி மட்டும் அவரிடம் கொடுத்தேன். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் 20 ம் தேதி 1வது எதிரி சக்திவேலிடம் அவரின் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். ஏப்ரல் மாதம் வேலை வந்துவிடும் என்று கூறினார். அதன்பிறகு மே மாதம் கோர்ட் லீவு ஆகிவிட்டது. ஜுன், ஜுலை மாதத்தில் கிடைக்கும் என்று கூறியிருந்தார். எனக்கு கலயாணம் நிச்சயக்கப்பட்டிருந்ததால் பணம் தேவை ப்பட்டது. அதனால் வேலை வேண்டாம் என்று கூறிவிட்டு நான் கொடுத்த பணத்தை கேட்டேன். அதன்பிறகு 2018 ம் ஆண்டு ஜுன் மாதம் 1வது எதிரி சக்திவேல் எனது அத்தான் கடையில் வைத்து ரூ.1 லட்சம் ரொக்கமாக என்னிடம் கொடுத்துவிட்டார். திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். நடந்த விபரத்தை கூறினேன்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் எம்.எஸ்.சி., கம்யூட்டர் சைன்ஸ் படித்துள்ளேன். பாஜாஜ் பைனான்ஸில் வேலை செய்து வருகிறேன். 2018 ம் ஆண்டு நான் பாஜாஜ் பைனான்ஸில் மேனேஜராக பணிபுரிந்தேன். நான் 2018 ம் ஆண்டு அரசாங்க வேலைக்காக 1வது எதிரி சக்திவேலிடம் நேரடியாக தொடர்புக்கொண்டு கேட்கவில்லை. எனது அத்தான் பெயர் பன்னீர்செல்வம், அவர் தையல் மிஷின் விற்பனை வியாபாரம் செய்து வருகிறேன். அவருக்கு சொந்த ஊர் திருத்துறைப்பூண்டி, ஆனால் அவர் திருவாரூரில் வசித்து வருகிறேன். 1வது எதிரி சக்திவேலும், நாங்களும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால் எனது அத்தான் மூலம் 1வது எதிரி வேலை வாங்கி கொடுப்பது தெரியவந்தது. போலிசார் விசாரணையில் நான் 1வது எதிரி சக்திவேல் எங்கள் சமூகத்தை சார்ந்தவர் என்பதை கூறியுள்ளேன். என் அத்தான் பன்னீர்செல்வம் 1 மற்றும் 2 வது எதிரிகளை பார்த்து பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. போலிசார் எனது அத்தான் பன்னீர்செல்வத்தை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பன்னீர்செல்வம் என்பவரை விசாரணை செய்தால்தான் 2 வது எதிரி மூலம் 1வது எதிரி பணம் வாங்கினார் என்பது தெரியும் என்றால் சரியல்ல. எந்த தேதியில் நான் பணம் பெற்றுக்கொண்டேன் என்று ஞாபகம் இல்லை. நான் 1வது எதிரியிடம் பணம் கொடுக்கும்போதும், நான் நேரடியாக இல்லை என்றால் சரிதான். நான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. நான் யாருக்காக சாட்சியளிக்கிறேன் என்று எனக்கு தெரியவில்லை. நான் பணம் கொடுத்தேன், வாங்கினேன் என்பதை கூற மட்டும்தான் வந்திருக்கிறேன். எனது அத்தான் பன்னீர்செல்வத்தை விசாரணை செய்தால்தான் உண்மை தெரியும் என்றால் அவரை விசாரிக்க வேண்டியதில்லை. அவரை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அதனை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

பிற நபர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு ஏமாற்றியது போல் 1வது எதிரி சக்திவேல் என்னை ஏமாற்றாமல் பணம் கொடுத்துவிட்டதால் முதல் விசாரணையில் பணம் நேரடியாக கொடுத்தேன் என்றும், 1வது எதிரியின் குறுக்குவிசாரணையில் நேரடியாக பணம் தராததுபோல் மாற்றி, மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின்போது நான்

பணத்தை நேரடியாக கொடுத்ததாக கூறவில்லை, என் அத்தான் மூலம் பணத்தை கொடுத்ததாக கூறியுள்ளேன். இந்த சங்கதியையும் வழக்கிற்காக போலிசார் விசாரணையில் மாறுபட்டு முதன்முதலில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

**2021**-ம் ஆண்டு **ஏப்ரல்** மாதம் **28**-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி **அ.சா. 28** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆர். முகில் | வயது | |
| தகப்பனார் பெயர் | பி.ராஜேந்திரன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மன்னார்குடியில் வசித்து வந்து பேப்பர் ரிப்போர்ட்டராக வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரியின் பெயர் சக்திவேல் மற்றும் 2 வது எதிரியின் பெயர் கோவிந்தலெட்சுமி. மன்னார்குடியில் ரமேஷ் என்பவர் வீடியோ கடை வைத்துள்ளார், அவர் மூலம் 1 வது எதிரி சக்திவேலை தெரியும். திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கோர்ட்டில் ஓ.ஏ. வேலை 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சக்திவேல் கூறினார். 2018 ம் ஆண்டு மார்ச் மாதம் ரூ.1 லட்சம் ரொக்கமாக 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்தேன். ரமேஷ் என்பவரும் என்னுடன் வந்திருந்தார். 1 வது எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது 1வது எதிரியின் வீட்டில் அவரது அம்மா மற்றும் மனைவி இருந்தார்கள். பணம் கொடுத்தும் வேலை கிடைக்காததால் 1வது எதிரியிடம் நாங்கள் போய் கேட்டோம். நாங்கள் பணம் கொடுத்த பிறகு மாதம், மாதம் 1 வது சக்திவேலிடம் பணம் சம்பந்தமாக கேட்டோம். அப்போது அவர் வேலை கிடைத்துவிடும் என்றும், நாங்கள் கோர்ட்டில் பேசியிருக்கிறோம், மேடமிடம் கேட்டிருக்கிறோம், பணம் கொடுத்துவிட்டோம் என்று கூறினார். கோர்ட்டில் ஜட்ஜ் அம்மாவிடம் பணம் கொடுத்துவிட்டதாக 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி கூறினார். நாங்கள் பணம் கேட்டு அலைந்தபோது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி அப்படி கூறினார். இதுவரையில் பணம் கிடைக்கவில்லை. திருவாரூர் போலிசார் 2019 ம் ஆண்டு வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் ஐ.டி.ஐ. வரை படித்திருக்கிறேன். நான் போய் 1, 2 எதிரிகளை பார்த்திருக்கிறேன். ரமேஷ் என்பவர் எனக்கு நன்கு தெரியும். அவர் கடையில் வேலை செய்ததால் எனக்கு அவரை நன்கு தெரியும். நான் தொகையை 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து கொடுத்தேன். கோர்ட்டில் ஓ.ஏ. வேலை கிடைக்கும் என்பதற்காக தொகை கொடுத்தேன். நான் வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக 1வது எதிரி சக்திவேலை சென்று பார்ப்பேன், அப்போது அவர் 2 வது எதிரி வேலைக்கு சென்றுள்ளார் என்றும், வெளியே சென்றுள்ளார் என்றும் கூறுவார். 2 வது எதிரியை ரமேஷ் எ ன்பவர் போனின் மூலம் பேசியுள்ளார் என்றாலும், நேரடியாக பார்த்துள்ளார் என்றாலும் சரிதான். இருவரையும் விசாரணை செய்த பிறகுதான் நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி 1வது எதிரியின் வீட்டில் குடியிருந்த விபரம் எனக்கு தெரியும். எதிரிகள் இருவரும் ஓரே இடத்தில் இருக்கிறார்கள் என்று தெரிந்துதான் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். வேலை கிடைக்கவில்லைஎன்பது தெரிந்தவுடன் நான் பணம் கேட்டேனா என்றால் ரமேஷ்தான் அடிக்கடி போய் 1வது எதிரி சக்திவேலை பார்ப்பார். எனக்கு வண்டியிலிருந்து விழுந்து கால் அடிப்பட்டு விட்டதால் ரமேஷ் போய் 1வது எதிரி சக்திவேலை பார்ப்பார். பணம் யாரிடம் இருக்கிறது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன், அவர் 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாக என்னிடம் கூறினார். 1வது எதிரியும், ரமேஷும், இன்னும் சிலரும் 2019 ம் ஆண்டு 2 ம் எதிரியிடம் பணம் கேட்டு திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகும் ஓயாமல் 2 வது எதிரியிடம் ரமேஷ் பணம் கேட்டுக்கொண்டு இருந்தார் என்றால் சரிதான். 2 வது எதிரியிடம் 1வது எதிரி சக்திவேல் பணம் கொடுத்து ஏமாந்துள்ளதால் திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 2 வது எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு ரமேஷ் மூலம் தெரியும். என்னிடம் பெற்ற தொகை முழுவதும் 2 வது எதிரியிடம்தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது- இரண்டுபேருமே வேலை வாங்கி தருவதாகத்தான் கூறினார்கள்.

கு.வி. (2 வது எதிரி தரப்பில்)

போலிசார் விசாரணையில் 2 வது எதிரியை தெரியும் என்றும், 1 வது எதிரி சக்திவேல் 2 வது எதிரியிடம் சொல்லி வேலை வாங்கி தருவதாக கூறினார் என்றும், பணம் கேட்டு சக்திவேலிடம் அழைந்தபோது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி ஜட்ஜ் அம்மாவிடம் பணம் கொடுத்துவிட்டதாகவும், வேலை கிடைத்துவிடும் என்றும் கூறினார்கள் என்பதை சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது என்று கூறிவிட்டு அவரை சந்தித்ததாக கூறாமல் தற்போது வழக்கிற்காக அவரை சம்மந்தபடுத்தி முதன்முறையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும், ரமேஷ் மூலம் இந்நாள் வரை நான் 1 வது எதிரி சக்திவேலிடம் பணம் கேட்டுக்கொண்டு வருகிறேன், அவர் பணம் தருகிறேன் என்று சொல்லி வருகிறார். அவ்வாறு அவர் ஆசை வார்த்தை காண்பித்து 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி சாட்சியம் சொன்னால் பணம் தருகிறேன் என்று கூறியதால்தான் 1 வது எதிரியின் குறுக்கு விசாரணையில் நான் போய் 1, 2 எதிரிகளை பார்த்திருக்கிறேன் என்றும், 2 வது எதிரி வேலைக்கு சென்றுள்ளார் என்றும், வெளியே சென்றுள்ளார் என்றும் கூறுவார்என்றும், 2 வது எதிரியை ரமேஷ் எ ன்பவர் போனின் மூலம் பேசியுள்ளார் என்றாலும், நேரடியாக பார்த்துள்ளார் என்றாலும் சரிதான்என்றும், இருவரையும் விசாரணை செய்த பிறகுதான் நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான் என்றும், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி 1 வது எதிரியின் வீட்டில் குடியிருந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், பணம் யாரிடம் இருக்கிறது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் நான் 1 வது எதிரியிடம் பணம் கொடுத்தேன், அவர் 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாக என்னிடம் கூறினார் என்றும், 1 வது எதிரியும், ரமேஷ்ம், இன்னும் சிலரும் 2019 ம் ஆண்டு 2 ம் எதிரியிடம் பணம் கேட்டு திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான் என்றும், அதன்பிறகும் ஓயாமல் 2 வது எதிரியிடம் ரமேஷ் பணம் கேட்டுக்கொண்டு இருந்தார் என்றால் சரிதான் என்றும், 2 வது எதிரியிடம் 1 வது எதிரி சக்திவேல் பணம் கொடுத்து ஏமாந்துள்ளதால் திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 2 வது எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு ரமேஷ் மூலம் தெரியும் என்றும், இரண்டுபேருமே வேலை வாங்கி தருவதாகத்தான் கூறினார்கள்என்றும் பல புதிய சங்கதிகளை 2 வது எதிரியை கோவிந்தலெட்சுமியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.